DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.373/18 |
| Depostition of witness for | Prosecution wit. PW.1 |
| Name | சுப்பிரமணியன் |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 02-06-2022

முதல்விசாரணை

நான் முதலைமொழி குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரரர் ஆவார். கடந்த 14.06.2018 ம் தேதி காலை 8 மணிக்கு நானும் எனது மனைவி மற்றும் மகளும் வீட்டில் இருந்தோம். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி கனகராஜ் மற்றும் அவரது தாயார் இருவரும் வந்து என்னை பார்த்து ஏன் கீதாவை வீட்டில் வைத்துள்ளீர்கள் என்று கேட்டார். எதிரிகளுக்கும் என் வீட்டில் வைத்திருந்த கீதாவிற்கும் என்ன உறவுமுறை என்பது எனக்கு தெரியாது. பிறகு எதிரி கணேஷ்குமார் என்னை பார்த்து கெட்டவார்த்தையால் தேவடியா மகனே என்று பேசி சட்டையை பிடித்து இழுத்து என்னை தள்ளி, கீழே கிடந்த செங்கலை எடுத்து

ஓங்கி எனது இடது கால் முட்டியில் அடித்தார் இதனால் எனக்கு முட்டி உடைந்து விட்டது. அப்போது அங்கிருந்த மாரிமுத்து மற்றும் இன்னொரு நபர் என்னை தூக்கி விட்டார் பிறகு நான் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் இருந்தேன். காவலர்கள் நடந்த விவரத்தை என்னிடம் வாக்குமூலமாக கேட்டார்கள். நான் நடந்த விவரத்தை சொன்னேன். அவர்கள் புகார் வாக்குமூலமாக பதிவு செய்தார்கள். புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும் புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1** ஆகும். பிறகு என்னை திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். ஆஜர் எதிரி தான் என்னை சம்பவத்தன்று அடித்த நபர் ஆவார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>.

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் எங்கு என்றால் சட்டையை பிடித்தது வீட்டின் வளைவு ஆகும். சம்பவத்தில் கீதா என்பவர் உங்களுக்கு உறவுமுறையா என்றால் எனது ஊர்க்காரர் ஆவார். கீதா என்பவரை எவ்வளவு நாட்களா தெரியும் என்றால் 20 வருடமாக தெரியும். கீதாவுக்கும் இந்த வழக்கின் குற்றவாளிக்கும் தகராறு இருந்ததா என்றால் இருந்தாக சொன்னார்கள் இது சம்மந்தமாக காவல்நிலையம் சென்றார்களா என்றால் எனக்கு தெரியும் அது சம்மந்தமாக வேறு ஒன்றும் தெரியாது. இந்த வழக்கின் எதிரிகள் உங்களுக்கு பக்கத்து வீடா என்றால் அவர்கள் கோவில் தெருவில் வசிக்கிறார்கள் ஒரே ஊர்தான். கீதாவும் உங்கள் மகளும் நண்பர்களா என்றால் ஒன்றாக படித்தவர்கள். ச்ம்பவம் நடந்த விவரம் கீதா மகளுக்கும் உங்கள் மகளுக்கும் தெரியுமா என்றால் தெரியாது. கீதாவுக்கும்

குற்றவாளிக்கும் என்ன பிரச்சனை என்று கேட்டேனா என்றால் இல்லை. அந்த பிரச்சனை விவரங்களும் தெரியுமா என்றால் தெரியாது. சம்பவம் நடந்த போது அந்த இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் சட்டையை பிடிக்கும் போது பொதுமக்கள் யாரும் இல்லை. என்னை கெட்டவார்த்தையால் திட்டும் போதும் அடிக்கும் போதும் பொதுமக்கள் இருந்தார்களா என்றால் பொதுமக்கள் பார்த்தார்கள் எனக்கு யார் என்று தெரியாது எனது மனைவி இருந்தாள். சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையம் சென்றேனா என்றால் ஆட்டோவில் செல்லும் போது அடிபட்டதை காவல்நிலையத்தில் சொன்னோம். இந்த வழக்கில் கீதா என்ற பெண்மணி அவர் தான் எதிரியிடம் சண்டை போட்டார் அதற்கு ஆதரவாக இருந்ததால் கீதாவிற்கும் எதிரிக்கும் உள்ள பிரச்சனை எனக்கு தெரியும் என்றால் நேரடியாக தெரியாது. கீதாதான் காவல்நிலையத்திற்கும் மருத்துவமனைக்கும் போக சொன்னார் என்றால் சம்பவத்தன்று கீதா இல்லை. கீதாவிற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.373/18 |
| Depostition of witness for | Prosecution wit. PW.2 |
| Name | மீனா |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 02-06-2022

<u>முதல்விசாரணை</u>

நான் முதலைமொழி குடியிருந்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரர் ஆவார். கடந்த 14.06.2018 ம் தேதி காலை 9 மணிக்கு நானும் எனது கணவரும் வீட்டில் இருந்தோம். அப்போது அங்கு வந்த ஆஜர் எதிரி கனகராஜ் மற்றும் பத்மா இருவரும் வந்து எங்களையும் அ.சா.1 யும் பார்த்து ஏன் கீதாவை வைத்து ஏன் காவல்நிலையத்தில் புகார் கொடுத்தீர்கள் என்று கேட்டார். பிறகு எதிரி கணேஷ்குமார் என்கிற கனகராஜ் அ.சா.1 ஐ பார்த்து கெட்டவார்த்தையால் தேவடியா மகனே என்று பேசி சட்டையை பிடித்து இழுத்து அ.சா.1 ஐ தள்ளி, கீழே கிடந்த செங்கலை எடுத்து ஓங்கி அ.சா.1 ன் இடது கால் முட்டியில்

அடித்தார் பிறகு அ.சா.1 ஐ ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அ.சா.1 கொடுத்த புகார் வாக்குமூலத்தில் உள்ள அறிவேன் சாட்சி கையெழுத்து என்னுடையது தான் அதில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியாது. புகார் வாக்குமூலம் அறிவேன் சாட்சி கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். பிறகு அ.சா.1 ஐ திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி விட்டார்கள். ஆஜர் எதிரி தான் என்னை சம்பவத்தன்று அ.சா.1 ஐ அடித்த நபர் ஆவார். சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u>.

சம்பவத்தின் போது எத்தனை மணி என்றால் காலை 9 மணி ஆகும். வழக்கின் கீதா என்பவர் சொந்தமா என்றால் இல்லை சம்பத்தன்று வீட்டிற்கு வந்தார்களா என்றால் இல்லை கீதாவின் மகள் தான் இருந்தாள். எனது மகளும் சம்பவத்தன்று வீட்டில் இருந்தாள். சம்பவம் நடந்தவுடன் காவல்நிலையம் சென்றேனா என்றால் மருத்துவமனை சென்றோம், எனது கணவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை

DEPOSITION OF WITNESSES
(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT No. 2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.373/18 |
| Depostition of witness for | Prosecution wit. PW.3 |
| Name | மாரிமுத்து |
| Father Name | |
| Village | |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the day 02-06-2022

முதல்விசாரணை

நான் முதலைமொழி குடியிருந்து டிரைவராக வேலை வருகிறேன். அ.சா.1 எனது பக்கத்து வீட்டுக்காரார் ஆவார். ஆஜர் எதிரி எனது ஊர்க்காரரர் ஆவார். மருத்துவமனையில் நான் அ.சா.1 ஐ பார்க்கச் சென்றேன். வேறு ஒன்றும் எனக்கு தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி சாட்சியை பிறழ் சாட்சி என குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதியின் பேரில் குறுக்கு விசாரணை.)

அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 14.06.2018 ம் தேதி காலை 9 மணிக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2

வீட்டில் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது, ஆஜர் எதிரி கனகராஜ் மற்றும் பத்மா இருவரும் வந்து அ.சா.1 ஐ கெட்டவார்த்தையால் தேவடியா மகனே என்று பேசி சட்டையை பிடித்து இழுத்து அ.சா.1 ஐ தள்ளி, கீழே கிடந்த செங்கலை எடுத்து ஓங்கி அ.சா.1 ன் இடது கால் முட்டியில் அடித்தார் பிறகு அ.சா.1 ஐ ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்றால் எனக்கு ஒன்றும் தெரியாது. எதிரியை இந்த வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை